17.02.2025

OS No: 120/2017

வா.சா.1 திரு. நாச்சியப்பன் த/பெ. சண்முகம்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

ரூபாய் 5லட்சம் பிரதிவாதிக்கு எந்த இடத்தில் வைத்து கொடுக்கப்பட்டது என பிராதிலோ, எனது சாட்சிய நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதியின் தாயார் பெயருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்தா அல்லது கிரையம் வாங்கப்பட்ட சொத்தா என்ற விபரம் குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதி மணியரசுடன் உடன் பிறந்தவர்கள் யாரேனும் உள்ளனரா என விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு தாவா சொத்தினை எந்த வகையில் பிரதிவாதியின் தாயார் பாத்தியப்படுத்தி வைத்தார் என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க பிரதிவாதி மேற்படி ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட காலத்தில் தாவா சொத்து பிரதிவாதிக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பதைக்காட்டிட என்ன ஆவணம் என்னிடம் கொடுத்தார் என்றால் அடிப்பத்திரம் ஒன்றைக் கொடுத்தார் அது என்ன பத்திரம் என்று தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கண்ட கையெழுத்து தன்னுடையது அல்ல என பிரதிவாதி மறுப்பு தெரிவித்த சூழலில் மேற்படி பத்திரத்தில் கண்ட கையெழுத்து பிரதிவாதியினுடையது தான் என்பதை நிரூபித்திட ஏதேனும் நடவடிக்கை நான் எடுத்துள்ளேனா என்றால் மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்ற காரணத்தினால் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. கிரைய ஒப்பந்த பத்திரம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 11.06.2015ம் தேதியில் ஏற்பட்டது. 11.06.2015ம் தேதிய ஒப்பந்த பத்திரத்தில் பிரதிவாதி எவ்வாறு கையெழுத்து செய்தார் என்றால் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தார். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் யார்

என்றால் ரம்ஜான் அலி என்பவரும், தென்னரசு என்பவரும், பிரதிவாதியின் மகனும் கையெழுத்து செய்துள்ளார் அவர் பெயர் ஞாபகமில்லை. சாட்சி கையெழுத்து செய்த நபர்களை தாவா வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயாரித்தது யார் என்றால் அங்குச்சாமி என்ற நபர் ஆவார். அங்குச்சாமி என்பவரை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் அவர் இறந்துவிட்டார். வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் 10.08.2015ம் தேதியில் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். பிரதிவாதிக்கு பாத்தியமான காரைக்குடி வங்கி காசோலையை என்னிடம் பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதி 10.08.2015ம் தேதி தன்னுடைய காசோலையை என்னிடம் திருப்பி தர கேட்டதற்கு ரூ.5லட்சம் கேட்டதாக பிரதிவாதி மீது புகார் கொடுப்பேன் என நான் மிரட்டினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சகோதரர் பெரியதம்பி ஆசிரியராக உள்ளார் என்றும் அவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இதே நீதிமன்றத்தில் பிரதிவாதியின் மகன் கணபதி இராமச்சந்திரன் அ.வ.எண்.343/2024 என்ற வழக்கை என் மீதும், பிரதிவாதியின் மீதும் தாக்கல் செய்து எங்களது வருகைக்காக 06.03.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 07.07.1997ம் தேதி பிரதிவாதியின் தாயார் பிரதிவாதியின் மகனுக்கு தாவா சொத்தை உயில் மூலம் பாத்தியப்படுத்தி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் உள்ள ஓட்டு வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது, தண்ணீர் ரசீது செலுத்தப்படுகிறது என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் பிரதிவாதி பெயரில் தான் செலுத்தப்படுகிறது. பிரதிவாதி பெயரில் மேற்படி ரசீதுகள் உள்ளது என்பதைக் காட்டிட அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண். 548/2019 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் பிரதிவாதியின் மனைவி தேவிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 11.06.2015ம் தேதி பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்த

பத்திரம் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அது குறித்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது பிரதிவாதியின் தாயாரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றும் அதனால் தாவா சொத்தை பிரதிவாதி எனக்கு கிரையஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்க உரிமையற்றவர் என்றால் தவறு. 11.06.2015ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரம் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும், அதிலுள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பம் வசதியான குடும்பமா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் வசதியான குடும்பம் தான். 2015ம் வருடத்தில் நான் வட்டித்தொழில் செய்த காலங்களில் அதிகமான வட்டி வாங்குவதாக சொல்லி என் மீது திருப்பத்தூர் காவல் நிலையத்தில் குற்றவழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை என்பதால் தாவா வழக்கை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலங்கடந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் மகன் கணபதி இராமச்சந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தாவா வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிராது பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.02.17 18:08:01 +0530